



சென்னை – அண்ணாநகர் பகுதியில் அமைந்துள்ள கந்தசாமி நாயுடு கல்லூரியில் நடைபெற்ற தமிழர் திருநாள் – சமத்துவப் பொங்கல் விழாவில், எம்.கே. மோகன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கி அனைவருடன் பொங்கல் விழா கொண்டாடினார்.

### ஏ.வி. ஆறுமுகம் ஏற்பாட்டில்! மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை!

# திருவொற்றியூர் மத்திய பகுதியில் 10,000 குடும்பங்களுக்கு பொங்கல் தொகுப்பு!

### ஆ.இராசா எம்.பி. வழங்கினார்! கலாநிதி வீராசாமி எம்.பி. – கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. – எஸ்.மோகன்- பங்கேற்பு!

சென்னை,ஜன.14-

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மத்திய பகுதி சார்பில் 14ஆம் ஆண்டு சமத்துவ பொங்கல் விழா மற்றும் 10,000 குடும்பங்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கும் விழா 10/01/2026, சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு பலராமன் தெரு, பெரியத்தோப்பு மணலியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினரும் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை தாங்கினார்.

கழக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா எம்.பி, பொங்கல் தொகுப்பினை வழங்கி சிறப்பித்தார்.

இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன், வை.மா. அருள்தாசன், மிசா.பா.மதிவாணன், வட்டக்கழக செயலாளர்கள் வ.முத்துசாமி, டி.கரிகாலச்சோழன், சாலை.டி. கணேசன், மு.செல்வம், வி.ஜி. தினகரன், ஆர்.டி.ரமேஷ்குமார், துர்கா கோதண்டம், எம். எஸ்.நாகலிங்கம், என்.கிருஷ்ணமூர்த்தி, பா.செல்வராஜ், எ.ஞானமூர்த்தி, ஸ்ரீதர் சஞ்சீவி, என்.விஜயரங்கன் மற்றும் கழக முன்னோடிகள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை திருவொற்றியூர் மத்தியப்பகுதி செயலாளரும், இரண்டாவது மண்டலக்குழு தலைவருமான ஏ.வி.ஆறுமுகம் செய்திருந்தார்.

### நா.கோதண்டன் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் – இரா.லட்சுமணன் முன்னிலை !

# 40வது வட்டத்தில் சமத்துவப் பொங்கல் விழா கோலப்போட்டி!

### ஆர்.டி.சேகர் துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகிறார் ! கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை, ஜன.14

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40வது வட்ட கழக திமுக சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் விழா நடைபெறுகிறது இன்று (14.1.2026 புதன்கிழமை)

1. கழக நிர்வாகிகளுக்கு தமிழர் திருநாளை முன்னிட்டு புத்தாடைகள் வழங்கும் விழா காலை 9.00 மணியளவில் கால்ரா மருத்துவமனை அருகில் தண்டையார்பேட்டை செ81ல் நடைபெறுகிறது.

2. 40வது வட்ட கழக சார்பாக கோலம் போட்டி மாலை 4.00 மணியளவில் அம்மணி அம்மன் தோட்டம் புது வண்ணை சென்னை 81 நடைபெறுகிறது.

வட்டச்செயலாளர் நா.கோதண்டன் தலைமை வகிக்கிறார். சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.வெற்றிவீரன், என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே. பாலு, மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

இரா.சீமான், எம்.எஸ்.ரவி, எஸ்.எம்.முருகன், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### அ.தவநேசன் தலைமையில்

# 125வது வட்டத்தில் பொங்கல் விழா!

### மயிலை த.வேலு நல உதவிகள் வழங்கினார்!

சென்னை, ஜன. 14–

திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 125 வது வட்டம் டாக்டர் அம்பேத்கர் பாலம் பகுதியில் கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் வட்ட கழக செயலாளர் அ.தவநேசன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ் முரளி, மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் கி.மதி, தொகுதி பார்வையாளர் கோவி. லெனின், மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி, மீனவர் அணி மு.தம்பிதுரை, இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.விக்னேஸ்வரன், பகுதி துணை செயலாளர்கள் ஏ.குமாரி, சீமன் சேகர் மற்றும் கழகத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டு கைப்பந்தாட்ட போட்டி நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் விளையாட்டு மேம்பாட்டு அணி பகுதி அமைப்பாளர் ஏ.விந்தன் தலைமையில் பகுதிசெயலாளர் இரா.லட்சுமணன் முன்னிலையில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக்கோப்பு மற்றும் ரொக்கம் ஆகியவை மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,வழங்கினர். மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட மற்றும் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அயப்பாக்கம் ஊராட்சியில் திராவிட மாடல் 2.0 பொங்கல் திருவிழா முன்னிட்டு கயிறு இழுத்தல், பலூன் உடைத்தல், உரியடித்தல் உள்ளிட்ட விளையாட்டு நிகழ்ச்சிகள் ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி ஏற்பாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கியும், பங்கேற்ற அனைவருக்கும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டது.





பெருங்களத்தூர் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில் திராவிட பொங்கல் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ஜா நரேஷ் குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர் டி. காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன்இ காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.சத்திய பிரபு, 33 வது வட்ட மாமன்ற உறுப்பினர் சி.சுரேஷ், 33 வது வட்ட செயலாளர் எம்.வினோத், தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ராஜேஷ், வி.கார்த்திக், வே.சிவசுப்பிரமணியம் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்

# பி.எஸ்.முருகேசனின் தந்தை மறைவு!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.14–

சென்னை தெற்கு மாவட்ட – கழகப் பொதுக்குழு உறுப்பினர் பி.எஸ். முருகேசனின் தந்தை மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்து வருந்திய கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து விடுத்துள்ள செய்தி வருமாறு:–

சிவகங்கை மாவட்டம் – மானாமதுரை தொகுதி – இளையான்குடி ஒன்றியம் – வடக்கு சீரனூர் கிராமத்தைச் சேர்ந்த கழகத் தோழரும் – சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் – கலைஞர் நகர் பி.எஸ்.முருகேசனின் தந்தையுமான ப.சுப்பிரமணியன் அவர்கள், நேற்று முன்தினம் (12.01.2026) அன்று தமது 92-வது வயதில் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் எனும் செய்தியறிந்து வருந்துகிறேன்.

அன்னாரை இழந்து துயருறும் – கழகப் பொதுக்குழு உறுப்பினர் பி.எஸ்.முருகேசன் உள்ளிட்ட அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆறுதலையும் – அன்னாரின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# திருச்சி மத்திய மாவட்டம்

# திருச்சி மேற்கு மாநகரம்

## உறையூர் பகுதி, தில்லைநகர் பகுதி, திருவரங்கம் கிழக்கு பகுதி, திருவரங்கம் மேற்கு பகுதி, திருவானைக்கோவில் பகுதி ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள வட்டங்கள் விவரம் மற்றும் வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், திருச்சி மத்திய மாவட்டம், திருச்சி மேற்கு மாநகரம், உறையூர் பகுதியில் உள்ள 9வது வட்டம், 9, 9–அ ஆகிய 2 வட்டங்களாகவும் – 11வது வட்டம், 11, 11அ ஆகிய 2 வட்டங்களாகவும் – தில்லைநகர் பகுதியில் உள்ள 24வது வட்டம், 24, 24அ ஆகிய 2 வட்டங்களாகவும் – திருவானைக்கோவில் பகுதியில் உள்ள 5, 6, 7 ஆகிய 3 வட்டங்கள் 5,5அ, 6, 6அ, 7, 7அ ஆகிய 6 வட்டங்களாகவும் பிரிக்கப்படுவதோடு, திருவரங்கம் பகுதி, திருவரங்கம் கிழக்கு, திருவரங்கம் மேற்கு ஆகிய இரண்டு பகுதிக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, திருவரங்கம் கிழக்கு பகுதியில் அமையும் 3, 4 ஆகிய 2 வட்டங்கள் 3, 3அ, 4, 4அ, ஆகிய நான்கு வட்டங்களாகவும் – திருவரங்கம் மேற்கு பகுதியில் அமையும் 1, 2 ஆகிய 2 வட்டங்கள் 1, 1அ, 2, 2அ ஆகிய நான்கு வட்டங்களாகவும் பிரிக்கப்படுகிறது.

அவ்வாறு பிரிக்கப்பட்ட வட்டங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**உறையூர் பகுதி**

**9வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: திப்புசுல்தான்** 29, பாக்குபேட்டை, உறையூர், திருச்சி.

**9அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: சி.செந்தில்குமார்** 95, மேட்டுத் தெரு, உறையூர், திருச்சி

**11வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: த.ராஜசேகர்,** உறையூர், திருச்சி.

**11அ–வது வட்டக்கழகப் பொறுப்பாளர்: ஜெ. விவேகானந்தன்,** உறையூர், திருச்சி

**தில்லைநகர் பகுதி**

**24வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: சங்கர்,** தெற்கு முத்துராஜா தெரு, புத்தூர், திருச்சி

**24அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : சாமிநாதன்,** 18, தெற்கு ராமலிங்கம் நகர், திருச்சி.

**திருவரங்கம் கிழக்கு பகுதி**

**(3, 3அ, 4, 4அ ஆகிய நான்கு வட்டங்கள்)**

**3வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : பன்னீர்செல்வம்,** 147, கீரைக்காரத் தெரு, திருவரங்கம், திருச்சி

**3அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்:** : ரா. கார்த்திகேயன், சி–38, கீழ அடையவளஞ்சான் வீதி, முனீஸ்வரன் கோவில் எதிரில், திருவரங்கம், திருச்சி

**4வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : பாலாமணி,** 32/9, சீனிவாசா நகர், காந்தி ரோடு, திருவானைகோவில், திருச்சி

**4அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : ஒ. சுரேஷ்குமார்** எம்எஸ்கே அம்பேத்கார் நகர், திருவரங்கம், திருச்சி

**திருவரங்கம் மேற்கு பகுதி**

**(1, 1அ, 2, 2அ ஆகிய நான்கு வட்டங்கள்)**

**1வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : குமரேசன்,** 13, செம்படத் தெரு, மேலூர், திருவரங்கம், திருச்சி

**1அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : ச. ஹரிஹரன்,** 36, 2வது தளம், ரோகிணி ரமணியம் அடுக்குமாடி குடியிருப்பு திருவரங்கம், திருச்சி

**2வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : ரங்கராஜன்,** 110, சாத்தார வீதி, திருவரங்கம், திருச்சி

**2அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : வ.வசந்தகுமார்** 55/36, வடக்கு வாசல், கொள்ளிடம் ரோடு எம்.கே.பாலாஜி, 21, டி–பிளாக், ஆண்டிமானியதோட்டம்.

**திருவானைக்கோவில் பகுதி**

**5வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : பிரகாஷ்,** 65எ, வெள்ளாளர் தெரு, மேலக்கொண்டையம்பேட்டை, திருவானைக்கோவில், திருச்சி.

**5அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : மு. தங்கவேல்** பாரதி தெரு, திருவானைக்கோவில், திருச்சி

**6அவது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : ஜெனார்த்தனம்** தாகூர் தெரு, திருவானைக்கோவில், திருச்சி

**6அ–அவது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : கை.கருணாநிதி** 63, பொன்னுரங்கபுரம், திருவானைக்கோவில், திருச்சி

**7வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : ப.சிவக்குமார்** பார்வதியம்மன் நகர், வீரேஸ்வரம், திருவரங்கம், திருச்சி 7.

**7அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : பால்ராஜ்,** 37, கீழத் தெரு, வீரேஸ்வரம் திருவரங்கம், திருச்சி

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.01.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### புதூர் ஆர்.லோகு தலைமை! தியாகராயர் நகர் கிழக்கு பகுதி

# 135 வது வட்டத்தில் திராவிட பொங்கல் விழா!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ பரிசு வழங்குகிறார்!

சென்னை,ஜன.14-

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 135வது வட்டத்தில் திராவிடப் பொங்கல் விழா மற்றும் கோலப்போட்டி இன்று 14.01.2026 புதன்கிழமை, காலை 9:30 மணியளவில் திருவள்ளுவர் பகுதி 32 தெரு 28 தெரு அசோக்நகர், 135 வது வட்ட சுழக பொறுப்பாளர் புதூர் ஆர்.லோகு தலைமையில் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

இதில் கோ.சு.மணி, ரத்னா லோகேஷ்வரன், ஜி.டி.அம்பேத்கார், வி.பி.எஸ். ஜெனார்த்தா, எம்.பி.மாறன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





எழும்பூர் வடக்கு பகுதி சார்பில் திராவிட பொங்கல் திருநாளை முன்னிட்டு மாவட்ட அளவிலான மகளிர் கைப்பந்து போட்டி விளையாட்டு மேம்பாட்டு அணி பகுதி அமைப்பாளர் ஆர்.சந்தோஷ் (ஏ) ராமச்சந்திரன் தலைமையில் மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்றது. போட்டிகளை மேயர்.பிரியா ராஜன் துவக்கி வைத்தார். பகுதி செயலாளர், மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினர் சொ.வேலு வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு பரிசு கோப்பை வழங்கினார்.உடன் பகுதி செயலாளர் வி. சுதாகர், கழகச் செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா,மாவட்ட அமைப்பாளர் ம. அசோக்குமார், துணை அமைப்பாளர் யஷ்வந்த் குமார் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### இராயபுரத்தில் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# 1200 பேருக்கு பொங்கல் பொருட்கள்! ஆர்.எஸ்.பாரதி வழங்கினார்!

### மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. வழங்கினர்!

சென்னை, ஜன.14-

தமிழ் புத்தாண்டு மற்றும் தை பொங்கல் திருநாளை கொண்டாடும் வகையில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஏற்பாட்டில், இராயபுரம் அறிவகம் திருமண மண்டபத்தில், 1,200 நபர்களுக்கு வேஷ்டி, சேலை, பரிசுப் பொருள்கள் வழங்கும் விழாவில், கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி.சேகர், ஆர். கே நகர் சட்டமன்ற உறுப்பினரும், சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருமான ஜே.ஜே. எபினேசர் ஆகியோர் கலந்து கொண்டு வேஷ்டி, சேலை, பரிசுப் பொருள்களை வழங்கினார்/ இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கலாநிதி வீராசாமி– கே.பி.சங்கர்– எஸ். மோகன் பங்கேற்பு!

# திருவொற்றியூர் மேற்கு பகுதியில் திராவிடப் பொங்கல் கலை நிகழ்ச்சிகள்!

### வை.ம.அருள்தாசன் ஏற்பாடு! மாதவரம் எஸ்.சுதர்சனம் நலஉதவி வழங்குகிறார்!

சென்னை,ஜன.14-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக திராவிட பொங்கல் விழா பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் ஏற்பாட்டில் இன்று 14.1.2026 புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் எர்ணாவூர், லிப்டிகேட் ரவுண்டானா அருகில் சிலம்பம், தப்பாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசை மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம். எல். ஏ, விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார். இதில் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர், எம்.எல்.ஏ, சட்டமன்றத் தொகுதி பாரவையாளர் தி.நகர் எஸ். மோகன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பரிசுகள் வழங்க உள்ளார்கள்.

இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### மு. செல்வகுமார் தலைமை! ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. கே. ஏழுமலை எம்.சி.,கோ.சு. மணி, முன்னிலை!

# 135 ஆ வட்டத்தில் பொங்கல் விழா - 1000 மகளிருக்கு சேலைகள்!

### மயிலை. த. வேலு எம்.எல்.ஏ. – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வழங்குகின்றனர்!

சென்னை,ஜன.14-

தியாகராய நகர் கிழக்கு பகுதி 135 வது அ வட்டத்தில் வட்ட செயலாளர் மு.செல்வகுமார் தலைமையில் பகுதி செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. பகுதிச் செயலாளர் கே. ஏழுமலை தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு. மணி,தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன், பகுதி பொருளாளர் ஜி.மோகன் ராஜ் ஆகியோர் முன்னிலையில் இன்று 14.01.2026 புதன் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அசோக்நகர் 83வது தெரு ஒட்கபாளையம் மற்றும் குடிசை மாற்று வரியா குடியிருப்பு ஆகிய இடங்களில் 200 மகளிர்கள் பொங்கல் வைக்கிறார்கள் மலி 6.00 மணியளவில் கோலா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி 1000 மகளிர்களுக்கு சேலைகள் வழங்கி சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு ,தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் உரையாற்றுகிறார்கள்.

இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். வசந்த் வெங்கடேசன் ,.விஷ்வா வெங்கடேசன், ஆ . ஸ்ரீதர் ஆ. ஸ்ரீகாந்த் நன்றி கூறுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடு135 வது அ வட்ட திமுக.

### காரம்பாக்கம் கணபதி பங்கேற்பு ! ச.சங்கர் கணேஷ் எம்.சி. ஏற்பாட்டில்

# சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் பொங்கல் விழா! மாபெரும் சதுரங்க போட்டி!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன், எஸ்.ஜோயல் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்குகின்றனர்!

சென்னை ஜன:14

சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி தி.மு.க சார்பில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, மாபெரும் சதுரங்கப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு மற்றும் சமத்துவ பொங்கல் விழா இன்று (14.01.2026 ) புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் சென்னை 600 087, வளசரவாக்கம், எஸ்.வி.எஸ் நகர் முதல் பிரதான சாலையில் அமைந்துள்ள தி ஹோலி கிராஸ் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், 151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான

வழக்கறிஞர் ச.சங்கர் கணேஸ் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., எஸ்.ஜோயல் ஆகியோர் துவக்கி வைத்து நலத்திட்டங்கள், சான்றிதழ்கள் (ம) பதக்கங்களை வழங்கி சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியை மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், வழக்கறிஞர் ச. சங்கர் கணேஸ் எம்.சி.ஏற்பாடு செய்துள்ளார்.

இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.



சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி இளைஞரணி சார்பில் திராவிட பொங்கல் 2026 முன்னிட்டு இளைஞரணி தோழர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் டி.ஜெகதீஷ் பாபு தலைமையில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி, மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன், த. விக்னேஸ்வரன், தினேஷ் மாணிக்கம், உமா சங்கர் அஸ்வின் குமார் டான்டி பிரகாஷ், துரை பார்த்திபன்,பொன்னுசாமி, அ.தாஸ், மா. பா.அன்பு, தாவநேசன்,வெற்றி, கோ.கண்ணன், தா. தீபன், வே. ஹேமந்த் குமார், நிரஞ்சன் சாய், குட்டி, சுந்தர் ரகு, அபினேஷ் பாபு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




” என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில் தெருமுனை பிரச்சார கூட்டம் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி திருப்போரூர் வடக்கு கழகத்தின் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் மற்றும் ஒன்றிய பெருந்தலைவர் எஸ் ஆர் எல். இதயவர்மன் தலைமையில் தாழம்பூர் ஊராட்சி பாகம் எண். 15,16,17, ல் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் மு.க.ஸ்டாலின் தெருவில் நடைபெற்றது திருப்போரூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எஸ் எம் கே .அண்ணாதுரை உரையாற்றினார் இந்த நிகழ்ச்சியில் வெண்பேடு இ. ரமேஷ், ஏ.கருணாகரன், பா.ஜெய்கணேஷ், பொன்மார் பி.என். எஸ்.செந்தில், ஏசுதாஸ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.